தினமலர் நமது மலர்
வாசகர்களே சொல்லுங்க: உங்கள் பகுதி பிரச்னைகளை 98423 70262 என்ற வாட்ஸ்அப்பில் எண்ணில் தெரிவியுங்கள். அவற்றுக்கு தீர்வுகாண, தினமலர் துணைநிற்கும்.
13.10.2026
தர்மபுரி ○ கிருஷ்ணகிரி

வலியுறுத்தல்

- ராகி அறுவடை குறிவைத்து கிருஷ்ணகிரி வனப்பகுதிக்கு
- கர்நாடகாவில் இருந்து யானைகள் கூட்டம் வர வாய்ப்பு
- வனத்துறை முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கணும்

ஓசூர், அக். 13–

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 1,501 சதுர கி.மீ., பரப்பளவுள்ள ஓசூர் வனக்கோட்டத்தில் 1,190 சதுர கி.மீட்டரில் காவிரி வடக்கு மற்றும் தெற்கு வன உயிரின சரணாலயங்கள் அமைந்துள்ளன. இப்பகுதியில் 468 வகையான தாவரங்கள், 36 வகையான பாலுாட்டிகள், 272 வகையான பறவை இனங்கள், 172 வகை வண்ணத்துப்பூச்சிகள் உள்ளன.

தேக்கு, ஈட்டி, சந்தனம், ஜாலாரி, உசில், ஆச்சான் மற்றும் பொருசு மர வகைகளும், யானைகள், சிறுத்தைகள், காட்டு மாடுகள், புள்ளி மான்கள், கடமான், கரடிகள், மயில்கள், எறும்புத்தின்னிகள், அரியவகை விலங்குகளான சாம்பல் நிற அணில்கள், எகிப்திய கழுகுகளும் உள்ளன.

ஓசூர் வனக்கோட்டத்தில் காவிரி வடக்கு, தெற்கு வன உயிரின சரணாலயங்களில் அதிக எண்ணிக்கையில் யானைகள் உள்ளன.

குறிப்பாக ஊடேதுர்க்கம், சானமாவு, நொகனுார், அய்யூர், ஜவளகிரி, உலிபண்டா, மகாராஜகடை, வேப்பனஹள்ளி, உடுபராணி, நாட்றாம்பாளையம், பிலிகுண்டுலு, உரிகம், தக்கட்டி, கெஸ்துார், மல்லஹள்ளி ஆகிய பகுதிகளில் ஏராளமான யானைகள் உள்ளன. அதன்படி, 300க்கும் அதிகமான யானைகள் இப்போது இம்மாவட்ட வனப்பகுதியில் உள்ளன.

இந்நிலையில், ஆண்டுதோறும் அக்டோபர் மாத இறுதியில் கர்நாடக மாநிலம் பன்னார்கட்டா வனப்பகுதியில் இருந்து, 100க்கும் அதிகமான யானைகள், கிருஷ்ணகிரி மாவட்ட வனப்பகுதிக்குள் வருகின்றன. ராகி பயிர் அறுவடையை குறி வைத்து வரும் இந்த யானைகள், 4 மாதங்கள் முகாமிட்டு, விவசாய பயிர்களை சேதப்படுத்துகின்றன. அவ்வாறு வரும் சமயங்களில் பயிர் சேதம் அதிகமாக இருக்கின்றன. அதே போல யானைகள் தாக்கி, உயிரிழப்புகளும் நடந்து வருகின்றன. இந்த நேரத்தில் யானைகளும் மின்சாரம் தாக்கியும், ரயில் பாதையை கடக்கும் போதும் என பல்வேறு வகையில் இறப்புகளை சந்திக்கின்றன. வழக்கம் போல இம்மாத இறுதியில் பன்னார்கட்டா வனப்பகுதியில் இருந்து யானைகள் வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த யானைகள் வனப்பகுதியில் இருந்து கிராமங்களுக்குள் வரும் முக்கிய பாதைகளில், அதிநவீன கேமராக்கள் பொருத்தப்பட்டு, யானைகளின் நடமாட்டத்தை கண்காணிக்க இந்த ஆண்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் யானைகள் வராத வகையில் இரும்பு வட கம்பி வேலிகள் அமைக்கும் பணியும் நடந்துள்ளது என வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், 'கர்நாடகா மாநிலத்தில் இருந்து இம்மாத இறுதியில், யானைகள் வர வாய்ப்புள்ளது. எனவே, யானைகள் வருவதை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை வனத்துறையினர் மேற்கொள்ள வேண்டும்.

வனப்பகுதியையொட்டி உள்ள கிராமங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். யானைகளின் நடமாட்டம் குறித்து பொதுமக்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். யானைகளை விரட்ட தேவையான அளவு பட்டாசுகள் தயார் நிலையில் வனத்துறையினர் வைத்திருக்க வேண்டும், என்றனர்.

நவராத்திரி விழாவையொட்டி ஓசூர் ஓம்சக்தி அம்மன் சிறப்பு அலங்காரத்தில் அருள்பாலித்தார். (அடுத்த படம்) வேல்முருகன் கோயிலில் கொலு வைத்து சிறப்பு பூஜை நடந்தது.

ஓசூர் அருகே நெடுஞ்சாலையில் டூவீலரில் வாலிபர்கள் 'வீலிங்'

போலீசார் நடவடிக்கை எடுக்க வாகன ஓட்டிகள் வலியுறுத்தல்

ஓசூர், அக். 13–

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர், சூளகிரி பகுதிகளில் உள்ள பெங்களூர்–கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் இளைஞர்கள் அவ்வப்போது டூவீலர்களில் வீலிங் சாகச பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இது போன்ற செயல்களில் ஈடுபடுவோரை போலீசார் அவ்வப்போது பிடித்து தண்டித்து வருவதும் வழக்கமாக உள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு ஓசூர் அருகே பேரண்டப்பள்ளி முதல் சூளகிரி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் டூவீலரில் சென்ற இளைஞர்கள் ஹெல்மெட் கூட அணியாமல் வீலிங் செய்தபடி அச்சுறுத்தும் வகையில் சென்றனர்.

அவ்வழியாக சென்ற வாகன ஓட்டிகள் இதை பார்த்து அச்சமடைந்தனர். இது குறித்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. இளைஞர்களின் இது போன்ற ஆபத்தான சாகச பயணங்களால் மற்ற வாகன ஓட்டிகள் விபத்தில் சிக்கும் அபாயம் உள்ளது.

எனவே போலீசார் இது போன்ற விபரீத சாகச பயணங்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்களும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஓசூர் அருகே தேசிய நெடுஞ்சாலையில் டூவீலரில் வீலிங் செய்தபடி சென்ற இளைஞர்கள்.

கிருஷ்ணகிரியில் குறைதீர் முகாமில் மாற்றுத்திறனாளிகளிடம் கலெக்டர் தினேஷ்குமார் மனுக்கள் பெற்றார்.

மக்கள் குறைதீர் கூட்டத்தில் 1,012 மனுக்கள் குவிந்தன

கிருஷ்ணகிரி, அக். 13

கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் கூட்டம் கலெக்டர் தினேஷ்குமார் தலைமையில் நடந்தது. இதில் வீட்டுமனை பட்டா, இலவச வீடு, முதியோர் உதவித்தொகை, இலவச தையல் எந்திரம், சலவைப் பெட்டி, சாலை வசதி, மின் இணைப்பு, மகளிர் உரிமைத்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 1,012 மனுக்கள் அளிக்கப்பட்டன. மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உரிய விசாரணை நடத்தி, தகுதியான மனுக்களுக்கு உடனடி நடவடிக்கை எடுக்க கலெக்டர் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர் முகாமில், கலெக்டர் தினேஷ்குமார் கோரிக்கை மனுக்களை பெற்றார். இதில் டிஆர்ஓ மஞ்சுளா, கலெக்டரின் நேர்முக உதவியாளர் முருகேசன், தனித்துணை கலெக்டர் அபிநயா உள்ளிட்ட துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

விபத்தில் பெண் காயம்

ஊத்தங்கரை, அக். 13

பெங்களூரில் இருந்து 30 பயணிகளை ஏற்றிக்கொண்டு திருவண்ணாமலை நோக்கி அரசு பஸ் ஒன்று நேற்று மாலை சென்று கொண்டிருந்தது. ஊத்தங்கரை அடுத்த ஒட்டப்பட்டி பஸ் ஸ்டாப் அருகே சென்றபோது எதிரே வந்த பிக்கப் வாகனம் பஸ்சின் பக்கவாட்டில் மோதிவிட்டு நிற்காமல் சென்றது.

இந்த விபத்தில் ஜன்னல் ஓரத்தில் அமர்ந்திருந்த பெண் பயணி ஒருவர் காயமடைந்தார். இதையடுத்து, அவர் சிகிச்சைக்காக ஊத்தங்கரை அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். விபத்து ஏற்படுத்திவிட்டு நிற்காமல் சென்ற பிக்கப் வாகனம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கல்யாண காமாட்சியம்மன் கோயிலில் நவராத்திரி விழா

ஓசூர், அக். 13–

ஓசூர் பாரதிதாசன் நகரில் உள்ள கல்யாண காமாட்சியம்மன் கோயிலில் 29ம் ஆண்டு நவராத்திரி விழா நேற்று முன்தினம் துவங்கியது. வரும் 20ம் தேதி வரை நிகழ்ச்சி நடக்கிறது. விழாவையொட்டி, தினமும் சிறப்பு ஹோமம், அபிஷேகம், அபிராமி அந்தாதி பாராயணம், மகா மங்களாரத்தி, கொலு பூஜை, பரதநாட்டியம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடக்கிறது.

தினமும் மாலை 6 மணிக்கு நடக்கும் நாட்டிய நிகழ்ச்சியில், தமிழகம், ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா, கேரளா, மும்பை, சிங்கப்பூர், அமெரிக்கா உட்பட பல்வேறு பகுதிகளிலிருந்து 300க்கும் அதிகமான கலைஞர்கள் பங்கேற்க உள்ளனர். விழா ஏற்பாடுகளை கோயில் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் செய்துள்ளனர்.

இதேபோல ஓசூர் வேல்முருகன் கோயிலில் கொலு வைத்து சுவாமிக்கு சிறப்பு பூஜைகள் நடந்து வருகிறது. ஓசூர் சப் கலெக்டர் அலுவலகம் எதிரிலுள்ள ஓம்சக்தி அம்மன் கோயிலில் நடந்த நவராத்திரி நிகழ்ச்சியில் சிறப்பு ஹோமம், அபிஷேகம் மற்றும் பூஜைகள் நடந்தது. அம்மன் ஐவ்வாது காப்பு விஜய லட்சுமி அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

பன்னப்பள்ளி பஞ். லட்சுமிபுரம் கிராம மக்கள் குடிநீர் கேட்டு காலி குடங்களுடன் கலெக்டர் அலுவலகத்துக்கு மனு அளிக்க வந்தனர்.

3 மாதமாக குடிநீர் தட்டுப்பாடு கலெக்டரிடம் மக்கள் மனு

கிருஷ்ணகிரி, அக். 13

கிருஷ்ணகிரி மாவட்டம், பன்னப்பள்ளி பஞ்., லட்சுமிபுரம் கிராமத்தில் 80க்கும் அதிகமான குடும்பங்கள் வசித்து வருகின்றன. இக்கிராமத்தில் கடந்த 3 மாதங்களாக முறையாக குடிநீர் கிடைக்காமல் பொதுமக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

குடிநீர் தட்டுப்பாட்டால் அன்றாட தேவைகளுக்குக்கூட தண்ணீர் கிடைக்காமல் கிராம மக்கள் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். குடிநீருக்காக நீண்ட துாரம் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் பெண்கள், முதியவர்கள் உள்ளிட்டோர் கடும் சிரமங்களை சந்தித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட பிடிஓ, பஞ்., கிளார்க், விஏஓ உள்ளிட்ட அதிகாரிகளிடம் பலமுறை முறையிட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என கிராம மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

குடிநீர் பிரச்னைக்கு தீர்வு காணக்கோரி கிராம மக்கள் காலி குடங்களுடன் கலெக்டர் அலுவலகத்திற்கு வந்தனர்.

அங்கு கலெக்டரிடம் மனு அளித்த அவர்கள் கூறியதாவது:

எங்கள் கிராமத்தில் 80க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகிறோம். கடந்த 3 மாதங்களாக குடிநீர் கிடைக்காமல் தவித்து வருகிறோம். இது குறித்து அதிகாரிகளிடம் தெரிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே கலெக்டர் நேரில் விசாரித்து, எங்கள் கிராமத்திற்கு சீரான குடிநீர் கிடைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

மாணவி விபரீதம்

பாப்பிரெட்டிப்பட்டி, அக். 13

கடத்துார் அருகே உள்ள கெடகாரஅள்ளி பகுதியை சேர்ந்த மாணவி ஜீவிதா (16). இவரது அப்பா கோவிந்தராஜ், அம்மா வனிதா ஆகிய இருவரும் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இறந்த நிலையில் தாத்தா, பாட்டி அரவணைப்பில் தங்கி கடத்துார் அரசு பள்ளியில் பிளஸ் 1 படித்து வந்தார்.

இவர் அடிக்கடி செல்போனில் பேசி வந்துள்ளார். இதை தாத்தா, மாமா ஆகியோர் கண்டித்துள்ளனர். இதனால் மனமுடைந்த மாணவி வீட்டின் அருகில் இருந்த கிணற்றில் குதித்து தற்கொலை செய்துகொண்டார்.

இதுகுறித்து மாணவியின் தாத்தா கிருஷ்ணன் கடத்துார் போலீசில் புகார் கொடுத்தார். அதன்பேரில் போலீசார் மாணவியின் உடலை கைபற்றி பிரேத பரிசோதனைக்காக தர்மபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தர்மபுரியில் தெருநாய்கள் தொல்லை : மக்கள் அவதி

தர்மபுரி, அக். 13–

தர்மபுரி மாவட்டத்தில் உள்ளி மிகப்பெரிய பஞ்.களில் ஒன்றாக உள்ளது இலக்கியம்பட்டி பஞ்சாயத்து. இந்த பஞ்.க்கு உட்பட்ட பகுதியில் தர்மபுரி கலெக்டர், எஸ்பி அலுவலகம் உட்பட பெரும்பாலான அரசு அலுவலங்கள் செயல்பட்டு வருகிறது.

இதில் தர்மபுரி நகரை ஒட்டியுள்ள பிடமனேரி, முனுசாமி செட்டி தெரு, இலக்கியம்பட்டி மற்றும் வெண்ணாம்பட்டியில் உள்ள குடியிருப்பு பகுதிகளில் அதிகளவில் தெரு நாய்கள் சுற்றி வருகிறது. தெரு நாய்கள் இந்த வழியாக உள்ள சாலைகளில் நடந்து மற்றும் இரு சக்கர வாகனங்களில் வந்து செல்லபவர்களை கடிக்க துரத்தி வருவது தொடர் கதையாக உள்ளது.

இதனால், இரு சக்கர வாகனங்களில் செல்பவர்கள் கீழே விழுந்து விபத்தில் சிக்கி வருகின்றனர். மேலும், தெரு நாய்களால், இப்பகுதியில் உள்ள பொது மக்களுக்கு உண்ணி காய்ச்சல் உள்ளிட்ட தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே, இலக்கியம்பட்டி பஞ்.க்கு உட்பட்ட பொதுமக்களின் நலன் கருதி, பஞ்சாயத்து நிர்வாகம் தெரு நாய்களை பிடித்து கருத்தடை மற்றும் வெறி நோய் தடுப்பூசி போட்டு தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். மேலும், தெரு நாய்களில் உள்ள உண்ணிகளை அழித்து, தொற்று நோய் பரவாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என, இப்பகுதி மக்கள் மத்தியில் கோரிக்கை எழுந்துள்ளது.

இலக்கியம்பட்டி பஞ்.க்கு உட்பட்ட முனுசாமி செட்டி தெருவில், பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் சுற்றித்திரியும் நாய்கள்.

இரும்பு பைப் விழுந்து வாலிபர் பரிதாபம்

மத்துார், அக். 13–

மத்துார் அருகே உள்ள கிருஷ்ணாபுரம் பகுதியை சேர்ந்த சென்னப்பன் மகன் பெருமாள் (31). இவர் வீடுகளுக்கு சோலார் இணைப்பு வழங்கும் தொழில் செய்து வந்தார். நேற்று முன்தினம் நடுபட்டு அரசு மேல் நிலைப்பள்ளி அருகே சாலையோரம் இருந்த இரும்பு துாணை பொக்லைன் எந்திரம் மூலம் அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்ததாக கூறப்படுகிறது.

பெருமாள்

அப்போது பெருமாள் மத்துாரில் இருந்து டூவீலரில் கிருஷ்ணாபுரம் பகுதிக்கு சென்று கொண்டு இருந்த போது திடீரென பொக்லைன் எந்திரம் மூலம் அகற்றப்பட்ட இரும்பு துாண் பெருமாளின் தலையின் மீது விழுந்தது. இதில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே பெருமாள் பரிதாபமாக இறந்தார்.

மத்துார் போலீசார் பெருமாளின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லுாரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் விபத்து குறித்து வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

बैंक ऑफ़ बड़ौदा Bank of Baroda 119 FOUNDATION YEAR LEADING WITH TRUST
ஓசூர் கிளை
வாசவி தெரு, ARSS சில்க்ஸ் எதிரில், ஓசூர் - 635109.
போன்: 04344 - 246671, 246672. Email: vjhokr@bankofbaroda.co.in

(baanknet போர்ட்டலில் நடத்தப்படும் ஏலத்திற்கான செய்தித்தாள்களில் வெளியிடப்படும் சுருக்கமான விற்பனை அறிவிப்பு)

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV-Aயின்படி (விதி 6(2) மற்றும் 8(6)யை பார்க்கவும்)
2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **பாங்க் ஆஃப் பரோடா வங்கி**யின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **''எங்கு உள்ளதோ அப்படியே'' ''எப்படி உள்ளதோ அப்படியே'' மற்றும் '' என்ன இருக்கிறதோ அதே நிலையில்''** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிலுவைத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

திரு.N.முனிராஜூ, த/பெ. காலஞ்சென்ற நாராயணப்பா, முகவரி: நெ.54, E2, நல்லூர் அக்கரஹாரம், பேகப்பள்ளி அஞ்சல், ஓசூர்-635 109 மற்றும் திருமதி. கந்தம்மா, க/பெ. N.முனிராஜூ, முகவரி: நெ.54, E2, நல்லூர் அக்கரஹாரம், பேகப்பள்ளி அஞ்சல், ஓசூர்-635 109,

Loan A/c.No.**75140600001278,** நிலுவை தொகை ரூ. **3,79,976.97/-** மேலும் **04.10.2026** அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.
04.10.2026 அன்று மொத்த நிலுவை தொகை ரூ. **3,79,976.97/-**

அசையாச் சொத்தின் சுருக்கமான விவரங்கள் மற்றும் ஏதேனும் வில்லங்கங்கள் இருப்பின்

கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், ஒசூர் சார் பதிவு மாவட்டம், ஒசூர் தாலுக்காவுடன் கூடிய பேகப்பள்ளி கிராமத்தில் **SF No.885/1B**, இந்த அளவிற்கு வரையறுக்கப்பட்ட ஏக்கர் 0.41செண்ட் நிலத்தில் மேற்படி நிலம் வீட்டு மனைகளாக மாற்றப்பட்டுள்ளது. அதில் மனையின் பரப்பளவு 1312 சதுர அடியில் அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டிடம் உட்பட. பளப்பளவு : கிழக்கு–மேற்காக வடக்கு பக்கம் 42 அடி, கிழக்கு – மேற்காக தெற்கு பக்கம் 40 அடி, வடக்கு–தெற்காக கிழக்கு பக்கம் 44 அடி, வடக்கு – தெற்காக மேற்கு பக்கம் 20 அடி, நடுவில் 1312 சதுரடி பரப்பளவு. மேலே கூறப்பட்ட சொத்து பேகப்பள்ளி கிராம பஞ்சாயத்து மற்றும் ஒசூர் ஒன்றிய குழுவின் எல்லைக்குட்பட்டது. **நான்கு எல்லைகள்** கிழக்கு திரு.பூதையாவிற்கு சொந்தமான சர்வே எண்ணில் மீதம் உள்ள நிலம், மேற்கு திரு. பூதையாவிற்கு சொந்தமான சர்வே எண்ணில் மீதம் உள்ள நிலம், வடக்கு திரு. பூதையாவிற்கு சொந்தமான சர்வே எண்ணில் மீதம் உள்ள நிலம், தெற்கு பஞ்சாயத்து சாலை.**சுவாதின நிலை: ஆக்கப்பூர்வமான**

நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ. 7,80,000/- டேவணித் தொகை ரூ. 78,000/- ஏல உயர்வு தொகை ரூ. 25,000/-

மின் ஏல தேதி மற்றும் நேரம் 17.11.2026 அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

சொத்தினை பார்வையிடும் தேதி : 22.10.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)
டேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்: 17.11.2026

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **https://www.bankofbaroda.bank.in/e-auction** மற்றும் **BAANKNET.COM** என்ற இணையதள இணைப்பை பார்க்கவும்/வருகைதரவும். மேலும் ஏலதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கிகரிக்கப்பட்ட அதிகாரி செல்: 9986515814 & 9515024578 தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 08.10.2026
இடம் : ஓசூர்
அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர்/ பேங்க் ஆஃப் பரோடா